பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
30 03 2026 MONDAY 6 30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 296 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம்p கூறியுள்ளது.

- மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வலிமையாக உள்ளதாக திமுக தெரிவித்துள்ளது.

- விவசாயிகளின் நலனுக்கு அஇஅதிமுக கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது.

- தேர்தல் நேரத்தில் இலவசங்களை அறிவிப்பது ஏற்புடையதல்ல என்று நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.

- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக த.வெ.க. குறை கூறியுள்ளது.

><>>>>><<<<<><

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக அமைக்கப்பட்ட பறக்கும் படையினர் மாநிலம் முழுவதும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 296 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதில் 61 கோடியே 98 லட்சம் ரூபாய் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

197 கோடி ரூபாய் மதிப்பிலான விலை உயர்ந்த ஆபரணங்களும், 9 கோடி ரூபாய் மதிப்பிலான மதுபானங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதற்கிடையே, சட்டப்பேரவை தேர்லுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கான நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

இந்த தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

><>>>>><<<<<><

தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வலிமையாக உள்ளது என்று அக்கட்சி தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் அவர், இன்று வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்

இந்த தொகுதியில் தாம் மீண்டும் வெற்றிபெறுவது உறுதி என்றும் திரு. மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

><>>>>><<<<<><

தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை அஇஅதிமுக நிறைவேற்றும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்

இன்று கடையநல்லூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

விவசாயிகளின் நலனுக்கு அஇஅதிமுக கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

><>>>>>><<<<<><

தமிழகத்தில் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், குற்றங்களை ஒடுக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளது.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு தவறிவிட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலின் போது வாக்குறுதிகளை அளிப்பதையும் அதை நிறைவேற்றாமல் இருப்பதையும் திமுக வாடிக்கையாக கொண்டுள்ளதாக பிஜேபி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

><>>>>>><<<<<><

காங்கிரஸ் வேட்பாளர்களை ஏன் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று அக்கட்சியைச் சேர்ந்த திரு. பிரவீன் சக்கரவர்த்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், குறைவான இடங்கள், ஏராளமான விண்ணப்பதாரர்கள், இதில் பாதி, தலைவர்களின் குடும்பத்தினருக்கு ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு தேர்தலிலும் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணியில் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திறன் இல்லையென்பதால், வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பதில் குலுக்கல் முறையை கடைபிடிப்பதன் மூலம் நேர்மையான தேர்வினை உறுதி செய்ய முடியும் என்று திரு. பிரவீன் சக்கரவர்த்தி கூறியுள்ளார்.

><>>>>>><<<<<><

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு பெருகியுள்ளதாக அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் காரணமாக திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலினுக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத திமுக, மீண்டும் அதே வாக்குறுதிகளை அளித்துள்ளதாகவும் திரு. டி.டி.வி தினகரன் கூறியுள்ளார்.

><>>>>>><<<<<><

தேர்தல் நேரத்தில் இலவசங்களை அறிவிப்பது ஏற்புடையதல்ல என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

இன்று காரைக்குடியில் தமது வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மது விற்பனை செய்யப்படமாட்டாது என்று உறுதியளிக்க, இலவசங்களை அறிவிக்கும் கட்சிகள் தயங்குவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இலவசங்களுக்கு எதிராக திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கருத்து தெரிவித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேர்மையான ஆட்சியை வழங்க விரும்புவோர், இலவசங்களை அறிவிப்பது ஏன் என்றும் திரு. சீமான் வினவினார்.

><>>>>>><<<<<><

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக த.வெ.க தலைவர் திரு. விஜய் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று பெரம்பூரில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

குழந்தைகள் முதல் வயதான பெண்மணி வரை பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாகவும் அவர் குறை கூறினார்.

குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதனை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திரு. விஜய் தெரிவித்தார்.

><>>>>>><<<<<><

நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா சர்மா, சமையல் எரிவாயு விநியோகமும் சீராக உள்ளதாக குறிப்பிட்டார்.

பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இயற்கை எரிவாயு விநியோகம் 100 சதவீதமாக உள்ளது என்றும் திருமதி. சுஜாதா சர்மா கூறினார்.

><>>>>><<<<<><

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட - துரை 29 செகண்ட்ஸ்)

><>>>>><<<<<><

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

><>>>>><<<<<><

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அரசு கலை கல்லூரியில் என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற பதாகைகளை ஏந்தியபடி மாணவிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

><>>>>><<<<<><

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மற்றும் செய்யூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக 100 மூன்று சக்கர வாகனங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

><>>>>><<<<<><

திருவண்ணாமலையில் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

><>>>>><<<<<><

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

><>>>>>><<<<<><

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Preeti Pawar மற்றும் Deepak காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Preeti Pawar - கஜகஸ்தானின் Elina Bazarova-வை வென்றார்.

ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் Deepak - உஸ்பெகிஸ்தானின் Asadullaev Khavasbek-வை வென்றார்.

><>>>>>><<<<<><

உலக Wushu சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Lanchenbi Chanu Rajkumari வெண்கலப்பதக்கம் வென்றார்.

சீனாவின் Tianjin-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

><>>>>>><<<<<><

உலக கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டி Macao-வில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் மனிக்கா பத்ரா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

><>>>>>><<<<<><

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

><>>>>>><<<<<><

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4. 6-4 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் Pavla Sviglerova-வை வென்றார்.*

*><>>>>><<<<<><*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*><>>>>>end<<<<<><*